செ.வெ.எண்.381/2009, நாள்:9-11-2009

**காஞ்சிபுரம் மாவட்டத்தில் குழந்தைகள் திரைப்பட விழா 11-11-2009 முதல் 20-11-2009 வரை நடைபெறுகிறது மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் தகவல்**

காஞ்சிபுரம் மாவட்டத்தில் குழந்தைகள் திரைப்பட விழா சென்னை குழந்தைகள் திரைபடக்கழகத்தின் சார்பில் பள்ளிக் குழந்தைகளுக்காக இலவசமாக 11-11-2009 முதல் 20-11-2009 வரை மாவட்டத்தில் உள்ள திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது. சென்னை குழந்தைகள் திரைபடக்கழகத்தின் சார்பில் பால்யமேதை, ஆயிஷா, ஆறுபேர் ஆட்டம், ஹயாத், அதிசய கோட்டு, மல்லி (1), மல்லி(2), மயேக் மிர்ஜா ஆகிய குழந்தைகள் பார்க்கக்கூடிய 8 குறும்படங்கள் திரையரங்குளில் திரையிடப்பட உள்ளது. பள்ளிக் குழந்தைகள் அனைவரும் மேற்கண்ட திரைப்படங்களை கண்டுகளிக்குமாறு பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தோஷ் கே.மிஸ்ரா இ.ஆ.ப. அவர்கள் கேட்டுக் கொள்கின்றார்.

செய்தி வெளியிடுபவர்,

செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,
காஞ்சிபுரம்.